
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 4 | ஜூலை 1991 | இதழ் 7



வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்

2, மணல் மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய்
புதன் } : மாலை 7-15—8-30...குடும்ப ஜெபக்கூட்டம்

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
(இரண்டாம் வியாழன் மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 - இரவு 9 மணி

வெள்ளி : மாலை 7-15 - 8-30 குடும்ப ஜெபம்

சனி : மாலை 7-00 9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


1. இன்று பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றவர்கள் யாரும் கிடையாது 1-5
2. நீங்கள் எவ்விதமான பயிற்சியை மேற்கொள்ளுகிறீர்கள்? 6-10
3. சவுல் என்கிற பவுல் 11-14
4. நோவா, நீதியைப் போதித்தவன் 15-19
5. எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா? 20-26
6. இறுதித் தீர்ப்பில் நீங்கள் எந்தப்பக்கம்? 27-28

# THIRUMARAI AASAAN

Editor
E.Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamil Nadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol 4. July—1991 Issue 7


**ஆசிரியவுரை :**

# இன்று பரிசுத்த ஆவியினுல் திருமுழுக்குப் பெற்றவர்கள் யாரும் கிடையாது

தற்காலத்திலும் இரட்சிப்புக்குப் பரிசுத்த ஆவியினுல் திருமுழுக்குப் பெறுவது அவசியம் என்று போதிப்பவர்கள் இருக்கிருர்கள், வேறு சிலர் இரட்சிக்கப்பட்டதற்கு அடையாளமாக ஒருவன் அந்நிய பாஷையில் பேசியாக வேண்டும் என்பர். இவர்கள் போதனைகள் சரிதாஞவென்று உரைகல்லான வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தால் இவர்கள் கூற்றுக்கு ஆதாரம் இல்லை என்று அறியலாம்.

**தற்காலத்தில் வாழுகிற எவருக்கும் பரிசுத்த ஆவியினுல் திருமுழுக்குப் பெறும் வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை.**

கிறிஸ்து பரிசுத்த ஆவியினுல் திருமுழுக்குக் கொடுப்பார்... என்ருர் யோவான் ஸ்நானகன். (மத் 3:11) கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குக் கொடுப்பேன் என்று வாக்குத்தத்தம் செய்தார். (அப் 1:3-5) அப்படியே கொடுக்கவும் செய்தார். (அப் 2:1-4) இதே போன்று புறஜாதியனுன கொர்நெலியு வீட்டாருக்கு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதாக பேதுரு விவரிக்கிறார். (அப் 11:15, 16) மற்றபடி கிறிஸ்து எல்லா மனிதர்களுக்கும், எல்லாக் காலத்திலும் திருமுழுக்குக் கொடுப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் என்பதற்கு ஆதாரமில்லை,

**பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்ற அப்போஸ்தலர்கள் பரிபூரணமான அறிவைப் பெற்றிருந்தார்கள்.**

''என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' (யோவான் 14:26) ''சகல சத்தியத்துக் குள்ளும் உங்களை நடத்துவார்'' (யோவான் 16:13) கூறுகிறது அதே விதமாக அப்போஸ்தலர்கள் அரிய பெரிய காரியங்களைச் செய்தார்கள். ஆனால் இன்றைக்கு பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்பவர்களுக்குப் பரிபூரண ஞானம் இருப்பதாகத் தெரியவில்லை. சாதாரண விசுவாசிகளாகிய நம்மைப் போன்றே அவர்களும் வேதாகமத்தை வாசித்துத் தான் காரியங்களைப் புரிந்து கொள்கிறார்கள். அவர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று கூறுவது உண்மையானால் அவர்கள் வேதாகமத்தைப் படித்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காதே. எல்லாம் மனப்பாடமாகவன்றே தெரிந்திருக்க வேண்டும்?! (யோவான் 14:26; 16:13), சாதாரணமான ஒரு விசுவாசியைப் போல இவர்களும் வேதாகமத்தைக் கற்றுத் தான் விஷயங்களைப் புரிந்து கொள்ள முடிகிறது என்றால் இவர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதினால் ஒரு சிறப்பும் இல்லையே. ஆகவே அவர்கள் கூற்று நம்பக் கூடியதாக இல்லை.

**பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று சொல்பவர்கள் பேசுகிறது அந்நிய பாஷை அர்த்தமுள்ளது அல்ல வெறும் பிதற்றல்.**

மொழி என்று சொல்லும்போது, இலக்கணத்தின்படி கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளக் கூடிய ஆற்றல் உள்ளது என்று தான் பொருள். பெந்தேகோஸ்தே நாளில் அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்றபிறகு பேசிய மொழிகளைக் கேட்டவர்கள் ''தங்கள் தங்கள் பாஷையிலே'', "ஜென்ம பாஷையிலே பேசக் கேட்கிறோமே'' என்றெல்லாம் ஆச்சரியப்பட்டதைக் கவனியுங்கள் (அப் 2:5-8) அங்கே கூடி வந்திருந்தவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து பண்டிகை கொண்டாட வந்தவர்கள். ஏறக்குறைய பதினேழு மொழி பேசுபவர்களும் தங்களுடைய மொழிகளில் அவர்கள் **தேவனுடைய மகத்துவங்களைப்** பேசக் கேட்கிறோமே என்று வியப்படைந்தார்கள் (2:11) இன்றைக்கு நாங்களும் தான் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுபவர்கள் தாங்-

கள் கற்றறியாத மொழிகளில் பேசுவார்களா? அந்நிய பாஷை என்று அவர்கள் பேசுவதெல்லாம் எவருக்கும் அர்த்தம் விளங்காத உளறல்களே.

விஞ்ஞானம் வளர வளர இவர்கள் கூற்றெல்லாம் சூரியனைக் கண்டு இருள் விலகுவது போல விலகிக் கொண்டிருக்கிறது. ''உலகத்தில் எத்தனையோ விதமான பாஷைகள் உண்டாயிருக்கிறது. அவைகளில் ஒன்றும் அர்த்தமில்லாதவைகள் அல்ல'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதியிருக்கிறார். (1கொரி 14:10) ஒலி நாடா (tape) மலிந்து கிடக்கிற நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். இவர்கள் அந்நிய பாஷை என்று பேசுவதைப் பதிவுசெய்து உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பிப்பாருங்கள். எவராவது இது எங்கள் மொழி என்று சொல்கிறார்களா என்று கவனியுங்கள். அப்படி எவராவது இது எங்கள் மொழி தான் என்று ஒப்புதல் அளிப்பார்களானால் அதை ஏற்றுக் கொள்வோம், செய்வீர்களா?

மேலும், பாஷை வரத்தின் நோக்கமே, சுவிசேஷப் பிரபல்யமாகத்தானே இருக்க முடியும். எல்லா மொழிகளையும் கற்றுக் கொண்டபின் சுவிசேஷத்தைப்பரப்புவதற்குக் கால தாமதம் ஆகும். என்பதற்காகத்தான். தேவன் அந்நிய பாஷை பேசும் ஏற்பாட்டைச் செய்தார். அப்படியானால் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த சுவிசேஷகர்கள் எந்த நாட்டுக்குச் செல்லுகிறார்களோ அந்த நாட்டின் மொழியைக் கற்காமலே அந்த நாட்டின் மொழியில் பிரசங்கிக்கும் வரத்தைத் தேவனிடத்தில் கேட்டுப் பெற்றுக் கொண்டு வரலாமே! ஏன் மொழி பெயர்ப்பாளர்களைத் தேடி அலைகிறார்கள்? இவைகளையெல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் போது இவர்கள் பெற்றிருப்பது பரிசுத்த ஆவியின் திருமுழுக்குத் தானா, சிந்திப்பீர்!

அன்று அப்போஸ்தலர்களால் நடப்பிக்கப்பட அற்புத அடையாளங்களை இன்றைக்குப் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று சொல்பவர்களால் செய்ய முடியாத பொழுது நம்முடைய சந்தேகம் இன்னும் அதிகமாகிறது.

''விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன : என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்ர்கள், நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.

சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதியஸ்தர்கள் மேல் கைகளை வைப்பார்கள். அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்'' என்று இயேசுசொன்னார்(மாற்கு 16:17,18)

நாம் ஏற்கனவே பார்த்த பிரகாரம் தாங்கள் முன்பின் படித்தறியாத பாஷைகளில் இவர்களால் பேச முடிவதில்லை. பேசுவதாக இவர்கள் மக்களை நம்ப வைக்க செய்யும் முயற்சியும் அபத்தமே. அதே போல பவுல் அப்போஸ்தலன் கொடிய விஷமுள்ள விரியன் பாம்பால் தீண்டப்பட்டும் ஒரு தீங்கும் இல்லாமல் சர்வசாதாரணமாக இருந்தார் என்று வாசிக்கிறோம். (அப் 28:3-5) அவரைப்போல இந்த நபர்கள் சாவுக் கேதுவான விஷத்தைக் குடித்த பிறகோ அல்லது கொடி நஞ்சுள்ள அரவங்களால் தீண்டப்பட்ட பிறகோ எவ்வித சேதமுமின்றி உயிர் பிழைத்தார்கள் என்றே கேள்விப்பட்டதில்லை.

அதே போன்று வியாதியஸ்தர்களைக் குணமாக்கும் விஷயத்தில் அப்போஸ்தலன் பேதுருவைப் பற்றித் திருமறை கூறுவதை வாசியுங்கள். ''பிணியாளிகளைப் படுக்கையின் மேலும், கட்டில்களின் மேலும் கிடத்தி பேதுரு நடந்து போகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு அவர்களை வெளியே வீதிகளில் கொண்டு வந்து வைத்தார்கள்.

சுற்றுப் பட்டணங்களிலும் இருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும், அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டு வந்தார்கள். **அவர்கள் எல்லாரும் குணமாக்கப் பட்டார்கள்.** (அப் 5:15, 16) பரிசுத்த-ஆவியினால் நாங்களும் தான் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்று கூறிக் கொள்கிற இந்தப் பேர்வழிகளின் நிலை என்ன? கும்பகோணத்தில் சுகம் அடைந்ததாகக் கோயமுத்தூரில் விளம்பரப்படுத்துவார்கள். சென்னையிலே நடந்தது என்று ஷெராம்பூரில் சொல்லுவார்கள். ஆக்ராவில் நிகழ்ந்தது தீன்று ஆரணியில் சாட்சி சொல்வார்கள். இவர்கள் கூறுவது எல்லாம் நடக்கிறதாக இருந்தால் இவர்கள் சொந்தக் குடும்பங்களிலேயே முடவர்களும், குருடர்களும், தீராத நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களும் சுகமடையாமலிருப்பது ஏன்? இவர்கள் சொல்வதுபோல் விசுவாசமில்லையா? அது மட்டுமா? பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றதாகச் சொல்லுகிற நபர்களே கடுமையான நோய்களால் பீடிக்கப்படும் பொழுது வெளியூர்களுக்கு இரகசியமாய்ப் போய் மருத்துவ நிபுணர்களிடமும் அறுவைச் சிகிச்சை நிபுணர்களிடமும் வைத்தியம் பார்த்து கொள்கிறார்கள். நோய் நீங்கி நலமடைவதில் நமக்கு ஒன்றும் நட்டமில்லை. வருத்தமும் இல்லை. ஆனால் இவைகள் நமக்குக் கூறுகிற உண்மை என்ன என்று தான் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இவர்கள் பெற்றிருப்பதாக நினைத்துக் கொண்டிருப்பது பரிசுத்த ஆவியினால் பெற்ற திருமுழுக்கு அல்ல என்பது தானே.

இவைகளை வாசிக்கிற என்னுடைய அருமையான நண்பர்களே, சகோதரிகளே! நான் யாரையோ குறி வைத்துத் தாக்குகிறேன் என்று எண்ணி முகம் சுளிக்காதீர்கள். பரிசுத்த வேதாகமத்தைப் பகுத்து, கருத்துடன் வாசித்துப் பாருங்கள். யார் பேசுகிறது? யாரிடத்தில் பேசப்பட்டது, எப்பொழுது பேசப்பட்டது, ஏன் பேசப்பட்டது என்பது போன்ற வினாக்களை எழுப்பி சிந்தியுங்கள்,

**அன்று அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியினால் திருமுழுக்குப் பெற்றதற்குச் சில காரணங்கள் உண்டு.**

அந்நாட்களில் புதிய ஏற்பாடு எழுதப்பட்டிருக்கவில்லை. மிகச் சாதாரண, படிப்பறிவற்ற அப்போஸ்தலர்கள் பேசுவதெல்லாம் தேவனால் அருளப்பட்டவைகள் தானா என்று மக்களுக்கு சந்தேகம் எழலாம். ஆகவே அவர்கள் பேசின காரியங்களை உறுதி செய்ய வேண்டிய அவசியம் இருந்தது. (மாற்கு16:20) அவர்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு புதிய ஏற்பாட்டை எழுதினார்கள் (2பேது 1:21; 2 தீமோ 3:16,17) எழுதினவைகள் போதும், ''எதையும் கூட்டவும் வேண்டாம்'' குறைக்கவும் வேண்டாம் என்றும் (வெளி-22:18,19) ''பூரண சுவிசேஷம்'' என்றும் (யாக் 1:25) என்றும் வேதம் மிகத் தெளிவாகச் சொல்லுகிறது.

அப்படியிருக்க, இன்றைக்கு நீங்களும் நானும் என்னத்தை நிரூபிக்க, சாதிக்க இந்த வரங்கள் நமக்கு இருக்கிறதாகச் சொல்லிக் கொண்டு, அதை மக்கள் நம்ப வேண்டும் என்பதற்காக சில வேடிக்கைகள் செய்து ''கைதட்டல்'' பெற்றுக் கொண்டு அலைகிறோம்? வேண்டாம், என் அருமைச் சகோதரர்களே! நம்முடைய அறியாமையினாலும்: உழைத்து வாழ விரும்பாத மனநிலையினாலும் இப்பிரபஞ்சத்துக்கு ஒத்த வேஷம் தரித்துக் கொண்டு கிறிஸ்தவத்தை வளர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டு கிறிஸ்தவத்தை மூட நம்பிக்கைகளின் கூடாரம் ஆக்காமல் எழுதப்பட்டுள்ள வசனங்களை கவனமாய் வாசித்துத் தியானித்து அவைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்து ஒளி கொடுப்போம். அப்படிச் செய்ய தேவன் தாமே நமக்கு ஒத்தாசை செய்வாராக!

**E. Z. செல்வநாயகம்**

# நீங்கள் எவ்விதமான பயிற்சியை மேற்கொள்ளுகிறீர்கள்?

'பயிற்சிகளின் யுகம்' என்று சொல்லும் அளவுக்கு இந்நாட்களில் ஓட்டம், நடை, நீச்சல் கால்பந்து, கைப்பந்து என்று பல வகை விளையாட்டுகள் உட்பட ஏறக்குறைய எல்லாக் காரியங்களுக்குமே பயிற்சியளிக்கிறார்கள்.

உடல் ஆரோக்கியமாக இருப்பதற்கும், தங்கள் உடலைக் கச்சிதமாக வைத்துக் கொள்வதற்கும், மற்றவர்களைக் காட்டிலும் தான் திறமைசாலி என்று காட்டுவதற்கும் இப் பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விதமான பயிற்சிகளை மேற்கொள்ளுகிறவர்கள் அதற்காகப் பெரும் பணம் செலவு செய்து அதற்குரிய உடைகள், சாதனங்கள், உணவு வகைகள் ஆகியவைகளை வாங்குகிறார்கள். இவ்வளவு முயற்சிகள் மேற் கொண்ட பிறகு இவர்கள் சாவுக்குத் தப்பித்துக் கொள்ள முடிகிறதா என்றால் ''இல்லை'' என்பதே பதிலாக இருக்கிறது. மற்றவர்களைப் போலவே இவர்களும் தங்களுக்குக் குறிக்கப்பட்ட காலத்தில் மாண்டுதான் போகிறார்கள்.

இருப்பினும் நமக்கு இருப்பது ஒரு சரீரம். அதை மரணம் வரையிலாவது நல்லவிதமாக வைத்துக் கொள்ள நினைப்பதில் தவறு ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட முயற்சிகளைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் இளம் பிரசங்கியான தீமோத்தேயுவுக்கு எழுதின கடிதத்தில், கடைசி காலத்தில் நடைபெறும் விசுவாச வீழ்ச்சியைக் குறித்து விளக்கி விட்டு, அந்த நாட்களில் உபதேசிக்கப்படும் சில கள்ள போதகங்களைப் பட்டியல் போட்டுக் காட்டின பின் ''இவைகளை நீ சகோதரருக்குப் போதித்து வந்தால், விசுவாசத்துக்குரிய வார்த்தைகளிலும், நீ அனுசரித்த நற்போகத்திலும் தேறினவனாகி இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல ஊழியக்காரனாய் இருப்பாய்.

சீர்கேடும், கிழவிகள் பேச்சுமாயிருக்கிற கட்டுக் கதைகளுக்கு விலகி தேவபக்திக்கேதுவாக முயற்சி பண்ணு. ''சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது''; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது'' என்று முடிக்கிறார் (1 தீமோ 4:6-8).

அதாவது சரீரத்துக்கடுத்த பயிற்சிகள் பயனுள்ளவைகள் தான் ஆனால் அது ஆன்மீகப் பயிற்சிக்கு நிகரில்லை என்கிறார். ஏனெனில்

ஆன்மீகப் பயிற்சி இம்மைக்கு மட்டுமல்ல மறுமைக்கும் நன்மை பயக்கும் என்கிறார். எபிரேய நிருப ஆசிரியரும் கூட ''பலமுள்ள ஆன்மீக ஆகாரத்தை உண்டு ஜீரணிக்கக் கூடிய அளவு வளர வேண்டும் அதாவது கர்த்தருக்கடுத்த காரியங்களில் ஆழமான அறிவு வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். ''பலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத் தக்கதான அறிவைத் தரும்'' என்கிறார் (எபி 5;14)

அப்போஸ்தலன் பேதுருவும் இதைப் பற்றி மௌனமாக இருக்கவில்லை. நாம் பெறுகிற பயிற்சியைப் பொறுத்து நம்முடைய மனம் நல்லதாகவோ அல்லது கெட்டதாகவோ இருக்கும் என்கிறார். அவர் காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த துன்மார்க்கர்களைக் ''விபச்சார மயக்கத்தால் நிறைந்தவர்களும், பாவத்தை விட்டோயாதவைகளுமாகிய கண்களையுடையவர்கள், உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்'' என்று சாடி விட்டுத் தொடர்ந்து ''தாங்களே கேட்டுக்கு அடிமைகளாயிருந்தும் மற்றவர்களுக்கு சுயாதீனத்தை வாக்குத்தத்தம் பண்ணுகிறார்கள் எதனால் ஒருவன் ஜெயிக்கப்பட்டிருக்கிறானோ அதற்கு அவன் அடிமையாயிருக்கிறானே. கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குக் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெபிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலையிலும் கேடுள்ளதாயிருக்கும்''.

**அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதையறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாக இருக்கும்.**

**நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது** என்று அங்கலாய்க்கிறார் (2 பேதுரு 2:14,15, 18-21)

மனிதர்களுடைய சிந்தனை, பேச்சு, செயல் ஆகியவைகளில் தவறான முறைகளைப் பின்பற்றுவார்களானால் ஏற்படும் தீய விளைவுகளை மேற் சொன்ன வசனங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. மேலும் அவர்கள் அவைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பார்களானால் அவர்களுடைய அக்கிரமங்கள் பெருகும். அது அழிவில்தான் போய் முடியும் (ரோமர் 6:23)

ஆகவே அவைகளை நாம் புறக்கணித்து விட்டு, கர்த்தருக்கேற்ற பயிற்சியில் நம் சிந்தையைச் செலுத்தும் போது நாம் எப்படிப்பட்ட பலன்களை அடைவோம் என்பதைப் பார்ப்போம் நாம் தினந்தோறும் ஒரு சில மணித்துளிகளாவது வேதத்தை வாசித்து, தியானித்து ஜெபத்திற்கு அதிக நேரம் ஒதுக்கி, ஏழை எளிய மக்களுக்கு இரக்கம் பாராட்டி, நல்ல முன்மாதிரிகளை நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து சத்தியத்தைக் கேள்விப்பட்டிராத மக்களுக்கு சத்தியத்தை எடுத்துச் சொல்லி, நம்முடைய வருவாயில் கணிசமான தொகையைக் கர்த்தருக்குக் கொடுத்து ஒருவருக்கொருவர் உண்மை பேசி, மன்னிக்கிற பண்பை வளர்த்துக் கொண்டு, நமக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறோமோ அதை மற்றவர்களுக்குச் செய்து கர்த்தரையும், எல்லா மனிதர்களையும் நேசிக்க வேண்டும்.

சரீரத்துக்கடுத்த சில பயிற்சிகள் கடினமானவைகள். அதை விடக் கடினம் ஆவிக்குரிய பயிற்சி. அதில் உறுதியாக நிலைத்து நிற்க வேண்டுமானால் அதிகப் பிரயாசம் தேவை. அதாவது கர்த்தருக்கு நம்மை முழுதும் ஒப்புக் கொடுக்க வேண்டும். அதைச் செய்யாததினால் தான் அநேகர் ஆவியின் கனியைப் பெற முடியாமல் போகிறது. பலர், காரியங்களை இன்றைக்கு, நாளைக்கு என்று ஒத்திப் போடுகிற சோம்பேறிகள். ''நாளை'' என்பதைச் சந்திக்காமலேயே அநேகர் போய் விடுவதுண்டு.

கண்டதை மிதமிஞ்சியும், வேளை தவறியும் உண்டு, உடம்பைக் கெடுத்துக் கொண்டும், சரீரத்தைப் பேணிக் காக்காமலும் நோய் வாய்ப்பட்டு, சடுதி மரணத்துக்கு ஆளாகுகிறார்கள். அதே போன்று ஆவிக்குரிய காரியங்களில் வேதாகமத்தின் அடிப்படையில் தங்கள் விசுவாசத்தை அமைத்துக் கொள்ளாமல், கண்ட கண்ட கொள்கைகளைப் பின்பற்றி, தாறுமாறாய் ஓடி வேதம் என்ன சொல்லுகிறது என்று கவனிக்காமல், தங்கள் மனசும் மாமிசமும் விரும்பிய காரியங்களைச் செய்கிறவர்கள் பிசாசின் வஞ்சக வலைகளில் சிக்கி, பின் வாங்கிப் போய் ஆவியிலே மரித்துப் போகிறார்கள். மரிக்காமல் இருந்தாலும் இன்றோ நாளையோ என்று ஊசலாடிக் கொண்டு இருக்கிறார்கள்.

உடல்பயிற்சி செய்து தங்கள் சரீரங்களை நல்ல நிலைமையில் வைத்திருக்க அறிந்தவர்கள் வெற்றி வாழ்க்கை வாழ்பவர்களும், ஆரோக்கியமும், நீண்ட ஆயுள் உள்ளவர்களாகவும் இருப்பார்கள் அதே விதி ஆன்மாவுக்கும் பொருந்தும் . . வேத அறிவில் நாட்டம் கொண்டு கர்த்தருடைய வழிகளைத் தெரிந்து கொண்டு புத்தி தெளிந்தவர்களாய் தேவபக்தியுடன் வாழ்பவர்கள் தான்

கர்த்தருடைய காரியங்களில் உறுதியாக இருப்பார்கள். அவர்கள் கர்த்தருடைய காரியங்களின் மேல் கண்ணோக்கமாயிருப்பதனால் தேவனால் ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

எனவே, கர்த்தருடைய காரியங்களில் சிறந்த பயிற்சி அடைய விளைவோருக்குப் பேதுரு கூறுகிற ஆலோசனைகளைக் கீழே தருகிறோம். "தேவனையும் நமது கர்த்தராகிய இயேசுவையும் அறி-கிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

தம்முடைய மகிமையினாலும், காருண்யத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி.

இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்-விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகாமேன்-மையும் அருமையான வாக்குத்தத்தங்களும அவைகளினாலே நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் தைரியத்தோடே ஞானத்தையும்.

ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்-தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்.

தேவபக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்.

இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்-களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறி-விலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது.

இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொரு-கிப்போன குருடனாயிருக்கிறான்,

ஆகையால் சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள். இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறி விழுவதில்லை.

இவ்விதமாய் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய இராஜ்ஜியத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

இதினிமித்தம் இவைகளை நீங்கள் அறிந்தும், நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும், உங்களுக்கு இவைகளை எப்பொழுதும் நினைப்பூட்ட நான் அசதியாயிரேன் 2பேதுரு 1:2-12.

மேற்சொன்ன வசனங்களை ஒருமுறைக்குப் பலமுறை வாசித்துத் தியானியுங்கள் ஆன்மாவுக்கடுத்த காரியங்களில் நாட்டமுள்ள ஒருவன் தன் மனதை நல்வழியில் பயிற்சி கொடுத்து கர்த்தருடைய காரியங்களில் வளர்ச்சியடையும் போது அப்படிப்பட்டவனுக்கு தேவன் எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைக் கட்டளையிடுவார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாறாக ஒருவன் தன் மனம் போன போக்கில் வாழ்ந்து விசுவாசத்தை விட்டு, விலகிப் போனால் அவன் ஆன்மாவை இழந்து நஷ்டமடைவான்.

என் நண்பனே, நீங்கள் எவ்விதமான பயிற்சியைப்பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள்? இந்த உலகத்துக்குரிய காரியங்களிலேயே உங்கள் சிந்தையைச் செலுத்திக் கொண்டிருந்தால் நீங்கள் நிச்சயமாய் ஏமாந்து போவீர்கள். ஏனெனில் அவைகள் எல்லாம் அழிந்து போகும் அப்போஸ்தலன் பவுல் ''சொன்னதை மீண்டும் உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன்.

**''தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும், இதற்குப் பின் வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது.** *(1தீமோ 4:8)* உலகத்திலேயே ஞானவான் என்று யாரைச் சொல்லலாம் என்றால் இம்மையிலும், மறுமையிலும் கிடைக்கக்கூடிய எல்லா ஆசீர்வாதங்களையும் அனுபவிக்கும் வகையில் தன்னுடைய வாழ்க்கையை நடத்துபவனே.


தேர்ந்தெடுக்கப்பட்ட 100 பாடல்கள் அடங்கிய பாட்டுப்புத்தகங்கள் கிடைக்கும்.

விலை ரூ. 3-00

அணுகுக : E.Z. **செல்வநாயகம்**

**2. மணல்மேடு வீதி**

**ஈரோடு. - 638002.**


**J.C. சோட்**

# சவுல் என்கிற பவுல்

சவுல் என்ற மறு பெயருள்ள பவுல், உலக வரலாற்றில் பொன்னேடுகளால் பொறிக்கப்பட வேண்டிய வெகு சிலரில் ஒரு-வர். இவர் கிறிஸ்தவத்தைத் தழுவிய சூழ்நிலை மிகவும் ஸ்வாரஸ்ய-மானது. அதை அப் 9,22,26 ஆகிய அதிகாரங்களை வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

இவர் வெகு வைராக்கியமாய்க் கடைப் பிடித்து வந்த யூத மார்க்கத்தை விட்டு விட்டுக் கிறிஸ்தவ மார்க்கத்தை தழுவியவர் (கலா 1:13,14) இதில் வேடிக்கை என்னவெனில் ஒரு காலத்தில் இந்தக் கிறிஸ்துவத்தைத் தான் அழித்து ஒழித்து விடக் கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபட்டார். (கலா 1:23) இப்படிப்பட்ட வெறியர், திடீர் என்று மனம் மாற்றம் அடைந்தது மிகவும் எதிர்-பாராததும், யூத மக்களிடையே பெரும்பபரப்பை ஏற்படுத்திய செய்தியாகவும் இருந்தது.

**சவுலுடைய குணாதிசயங்கள் :** கிறிஸ்தவத்தைத் தழுவிக் கொள்ளும் முன்னர் கூட அவர் சிறந்த மதவாதியும் ஒழுக்கமுள்-ளவரே (பிலி 3:6) அவர் எப்பொழுதும் சுத்த நல்மனச் சாட்சி-யோடு மனிதருக்கு முன்பாக மட்டும் அல்ல, தேவனுக்கும் முன்-பாகவும் நடந்து கொண்டவர் (அப் 23:1; 24:16) ஆனால் பாவம்! தான் நிலை நிறுத்த முயற்சிக்கிற யூத மதம் காலாவதி ஆகி-விட்டதை சவுல் அறியாதிருந்தார். (கொலோ 2:14-17) இயேசு கிறிஸ்துவின் மரணத்துக்கும் உயிர்த்தெழுதலுக்கும் பின்னர் வாழ்-கின்ற மக்கள் யூத மார்க்கத்தின் பிரமாணங்களின்படி இரட்சிப்-படைய முடியாது என்பதை அறியாதிருந்தான். (யோவான் 14: 1-6) கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மேன்மையை விளங்கிக் கொள்-ளாமல் கிறிஸ்துவத்தைத் தளிவின, தழுவுகிற மக்களைத் துன்-புறுத்தி அந்த மார்க்கத்தையும் அழித்து விடுவது தான் தேவ-னுக்குச் செய்யும் தொண்டு என்று நினைத்தார். (1தீமோ 1:13) இயற்கையாக அவர் ஒழுங்கில்லாதவரும் துன்மார்க்கனும் அல்ல யூத மார்க்கத்தில் அவனுக்கு இருந்த பற்றும் வைராக்கியமுமே கிறிஸ்-தவ மார்க்கத்தின் மேல் பகைமை கொள்ளக் காரணமாயிருந்தது. பின்னர் ஒரு காலத்தில் அதை உணர்ந்து துக்கப்பட்டு, ''பாவி-களில் பிரதான பாவி'' என்று தன் அவலநிலலயை அறிக்கை-யீட்டியிருக்கிறார். (1 தீமோ 1:13-15; பிலி 3:6).

கிறிஸ்தவத்தைத் தழுவுவதற்கு முன்பு, இயேசு கிறிஸ்து கட்டிய சபையை அழித்து நிர்மூலமாக்கிப் போட்டுத் தான் வேறு வேலை என்று வெறித்தனமாக அலைந்த சவுலுடைய வாழ்க்கை,

ஒருவன் தவறான மார்க்கத்தைப் பின் பற்றுவதில் கூட நல்ல மனச்சாட்சி உடையவனாக இருக்க முடியும் என்பதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. *(கலா 1:23; அப் 9:1-2; 26:9-11)* அதனாலன்றோ சாலமோன் ஞானி **"மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள்"** என்கிறார். *(நீதி 14:12)* ஆதலால் இப்படி கர்த்தர் நிமித்தமாகத் தான் அவைகளைச் செய்தேன் என்று சொன்னாலும் அவர் தேவ சித்தத்தை அறிந்து கொள்ளாத ஒரு பாவியாகவே வாழ்ந்தார். *(1 தீமோ 1:13-15).*

## கர்த்தர் ஏன் சவுலுக்குத் தரிசனமானார்?

கர்த்தர் சவுலுக்குத் தரிசனமானது, தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்துக்குப் புறம்பாக விசேஷித்த முறையில் அவரை இரட்சிப்பதற்காக அல்ல. சிலபேர் இரட்சிப்படைவதற்கு கர்த்தர் தரிசனமாக வேண்டும் என்று தவறாக நினைத்துக் கொண்டும், பேசிக் கொண்டும் திரிகின்றனர். ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கு கர்த்தரை தரிசிக்க வேண்டும் என்ற விதியேதும் கிடையாது. *(1 பேதுரு 1:8)* பின் ஏன் சவுலுக்கு தரிசனமானார்? *(1 கொரி-15:8)* சவுல் அப்போஸ்தலப் பட்டத்தைப் பெறுவதற்குரிய தகுதியை அடையக் கர்த்தரை தரிசிப்பது அவசியமாக இருந்தது. அப்பொழுது தான் அவர் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க முடியும். *(அப் 1:21,22;26:16-18)* பின்னர் ஒரு சமயம் இந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து **"எல்லாருக்கும் பின்பு அகாலப் பிறவி போன்ற எனக்கும் தரிசனமானார்"** என்று கூறுகிறார். *(1 கொரி 15:8)* அவர் கூறியதின் கருத்து என்ன? பாவியாகிய அவருக்கு கிறிஸ்து பரமேறுவதற்கு முன்னர் அவரைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை; இப்பொழுது கர்த்தருடைய கிருபையால் அந்த அரும் வாய்ப்பைப் பெற்றேன் என்பதைத்தான் அவ்வாறு கூறினர். நாம் இன்றைக்கு அப்போஸ்தலர் ஆகும் சந்தர்ப்பம் இல்லை என்பதால் நாம் கர்த்தரை தரிசிக்க வேண்டியதில்லை. ஆகவே, எனக்கும் கர்த்தர் தரிசனம் கொடுக்க வேண்டும் என்று வீணுகக் காத்திருக்க வேண்டாம். இந்த நினைவுகளைச் சதா தங்கள் உள்ளங்களில் வைத்துக் கொண்டிருப்பதால் இவைகள் சில வேளைகளில் கனவுகளாகத் தோன்றலாம் அது தரிசனமல்ல" "தொல்லையின் திரட்சியினுல் சொப்பனம் பிறக்கிறது போல ....," *(பிர 5:3)* ஏசாயா 29:8 ஐக் கூட வாசிக்கவும்.

**சவுலைப் போல, பாவியாக ஒருவன் வெளிச்சத்தைக் காண வேண்டியது அவனுடைய இரட்சிப்புக்கு அவசியமா?**

சவுல் வெளிச்சத்தைப் பார்த்தது மத்தியான வேளை; இருள் சூழ்ந்த இரவு நேரத்தில் அல்ல. வெளிச்சத்தைக் காண்பதற்கு முன் அவர் எப்படிப் பாவியாக இருந்தாரோ அதே போல வெளிச்சத்தைக் கண்ட பிறகும் அவர் பாவியே. வெளிச்சத்தைக் கண்ட பிறகு, ''ஆண்டவரே நீர் யார்?'' என்ற கேள்வியைக் கேட்டான். அதற்கு இயேசுவின் பதில்: நீ துன்பப்படுத்துகிற-இயேசு நானே. (அப் 9:5) கவனியுங்கள்: இயேசு இவருடைய கேள்விக்குப் பதில் அளிக்கும் வரை அவர் இயேசுவை இன்னார் என்று அறிந்து விசுவாசிக்கவில்லை. **'தேவனுடைய வசனத்தைக் கேட்பதினால் விசுவாசம் வருகிறது''** என்று பின்னர் அவரே பரிசுத்த ஆவியைக் கொண்டு எழுதுகிறார் (ரோமர் 10:17)

சவுல் பார்த்த மாதிரி ஒரு வெளிச்சத்தைக் காண்பது தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் ஒரு பகுதியன்று. சவுல் தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்திற்கு முழுமையாகக் கீழ்ப்படியாத வரை இரட்சிக்கப்படவில்லை (எபி 5:8,9, ரோமர் 6:17-18;6:3-4) விசேஷித்த கிருபை, உணர்ச்சிகள் அல்லது வேறு எந்த செயல் பாடுகளும். அவைகள் உண்மையாக இருந்தாலும், போலியாக இருந்தாலும். அவைகள் தேவனுடைய மன்னிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியல்ல. தேவனுடைய வார்த்தைகளுக்குப் புறம்பான விசேஷித்த வரம் அது, இது என்ற எந்த அனுபவமாக இருந்தாலும் அவைகள் இரட்சிப்புக்குரிய தகுதிகளைத் தராது. சுவிசேஷமே இரட்சிப்புக்கு தேவ பெலன் (ரோமர் 1:16; எபி 4:12)

## இரட்சிக்கப்படுவதற்கு சவுல் செய்தது என்ன?

''ஆண்டவரே, நீர் யார்? என்ற சவுலின் கேள்விக்கு இயேசு கூறிய பதில்'' ''நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே'' என்பது. இதைக் கேட்டவுடன் சவுல் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர்? என்றான். அதற்குக் கர்த்தர், ''நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்''. என்றார் (இப் 9:5,6)

அந்தப்படியே சவுல் தமஸ்குல் பட்டணத்துக்குள் கொண்டு வரப்பட்டார். அங்கே அவர் மூன்று நாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தார். அப் 9:11, ''சவுல் ஜெபம் பண்ணுகிறார்'' என்று கூறுகிறது. அவர் செய்த ஜெபம் அவருக்கு உடனடியாக இரட்சிப்பைத் தந்து விட்டதா? நிச்சயமாக இல்லை. ''எப்படி நீங்கள் அவ்வளவு உறுதியாய்ச் சொல்லுகிறீர்கள்?''. - இது என் இடைவிடாத, கடுமையான ஜெபத்தின் மூலமாக இரட்சிப்புப் பெற்று விட்டேன் என்று சுயதிருப்தியோடு நிமிர்ந்து நடைபோடும் ஒரு நண்பரின் காட்டமான கேள்வி.

அவசரப்படாமல் கவனியுங்கள். அனனியா என்பவர் சவுலிடத்திற்கு அனுப்பப்படுகிறார். அந்த அனனியா சவுலிடம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? வேதாகமமும் பேசட்டும். **''இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு' என்றார்.** *(அப் 22:16; அப் 9:18)* இங்கே இன்னும் ஒரு கேள்வி. ஒரு பாவி திருமுழுக்குப் பெற்று விட்டதினாலேயே இரட்சிப் படைந்து விடுகிறாரா? சரியாகச் சொல்வோமானால் ''இல்லை'' என்பது தான் பதில். எந்த ஒரு நற்செய்தி உரைஞரும் அவ்விதமாய் பிரசங்கிக்கவில்லை. இரட்சிப்பு விசுவாசம் மட்டும் போதும் என்பது எவ்வளவு அபத்தமோ அதே அளவு ஞானஸ்நானம் மட்டும் ஒருவனை இரட்சிக்கும் என்பதும் அபத்தமே அல்லது மனந்திரும்பினால் மட்டும் போதும் (அப் 17:30,31) அல்லது அறிக்கை செய்தால் மட்டும் போதும் (மத் 10:32,33) என்பதும் தவறே.

தேவனுடைய வசனத்தை நன்கு புரிந்து கொண்டு வாசித்தால் ஒரு பாவி இரட்சிப்படைவதற்கு விசுவாசமும் வேண்டும். மனந்திரும்புதலும் வேண்டும். அறிக்கையிடுதலும் வேண்டும். திருமுழுக்கும் வேண்டும் என்பது தெரியவரும்.

பவுல் தான் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றேன். என்கிறார். (ரோமர் 6:3-4; கலா 3:26,27) பவுல் தன் இரட்சிப்பைக் குறித்து உண்மையை சொல்லுகிறாரா? ஆம்! இரட்சிப்பு கிறிஸ்துவில் இருக்கிறது. (2 தீமோ 2:10). அந்த இரட்சிப்பை எப்படி அடைந்தார்? கிறிஸ்துவுக்குள் திருமுழுக்குப் பெற்றுக் கொண்டதின் மூலம் அந்த இரட்சிப்பில் பங்கடைந்தார். பவுல் அப்போஸ்தலன் விசுவாசத்தினாலன்றே இரட்சிக்கப் பட்டேன் என்று கூறுகிறார். (ரோமர் 5:1,2) உண்மைதான். விசுவாசத்தினால் இரட்சிக்கப்படும் படிக்கு அவர் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார் என்பதையும் மறந்து விடாதீர்கள். ஒருவன் கிறிஸ்துவுக்குப் புறம்பே வெறும் விசுவாசத்தைக் கொண்டு மட்டும் நீதிமானாக முடியாது.

இதை வாசிக்கும் என் அருமை நண்பனே, சகோதரியே, பவுலின் முன்மாதிரியைப் பின் பற்றி கிறிஸ்துவின் உபதேசக் கூட்டங்களுக்கு முழுமையாய்க் கீழ்ப்படிந்து இரட்சிப்பைச் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்று அன்புடன் மன்றாடுகிறேன்.

**E.Z. செல்வநாயகம்**

# நோவா, நீதியைப் போதித்தவன்

**''லாமேக்கு நூற்றெண்பத்திரண்டு வயதான போது, ஒரு குமாரனைப் பெற்று, கர்த்தர் சபித்த பூமி-யிலே நமக்கு உண்டான வேலையிலும், நம்முடைய கை-களின் பிரயாசத்திலும், இவன் நம்மைத் தேற்றுவான் என்று சொல்லி, அவனுக்கு நோவா என்று பேரிட்டான்''** (ஆதி 5:28-29) ''தேற்றுபவன்'' எனப் பொருள்படும் பெயரைக் கொண்ட இக்குழந்தை விசேடமானதாக இருக்கும் என நோவா-வின் தந்தை எண்ணினார். ஆதாமின் வம்சா வழியில் பத்தாவது இடத்தில் இருந்தான் நோவா.

பூமியில் மக்கள் பெருகி பலுகிய போது துன்மார்க்கம் தலைவிரித்தாடிற்று மனிதனுடைய தரக்குறைவு கற்பனைக் கெட்-டாத அளவிற்கு தாழ்ந்து போயிற்று. நாட்டில் எந்தச் சட்ட-மும் கடைப்பிடிக்கப்படுவதுமில்லை, அவற்றிற்கு எவ்வித மதிப்பும் இல்லை. தனிப்பட்வர்களின் உரிமைகளுக்கு உத்திரவாதம் எதுவும் கிடையாது, மனிதனுடைய சுயகௌரவம் மடிந்து போயிற்று. நன்மைக்கும் தீமைக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்பதே சட்டமாயிற்று. இப்படியாகப்பட்ட அவலங்கள் எல்லாம் அலைமோதும் ஒரு நாட்-டை கற்பனை செய்து பாருங்கள். அதுவே நோவா காலத்திய உலகமாக இருந்தது. துன்மார்க்கம் முற்றிலுமாக உலகை ஆட்டு வித்த அந்நிலையைக் கண்ட தேவன், ''மனிதன் முதற்கொண்டு, மிருகங்கள் ஊரும் பிராணிகள், ஆகாயத்துப் பறவைகள்'' யாவற்-றையும் அழிக்கத் திட்டமிட்டார். மனிதனை உண்டாக்கினதற்காக கர்த்தர் மன வேதனைப்பட்டார்.

இவ்வித அக்கிரமங்களுக்கு மத்தியில், **''நோவாவுக்கோ கர்த்-தரின் கண்களில் கிருபை கிடைத்தது.''** ( ஆதி. 6:8 ). துன்மாக்கம் நிறைந்த பரிதாப நிலையிலும் நோவாவுக்கு கர்த்-தரின் கண்களில் கிருபை கிடைத்த காரியமானது இன்று ஒவ்-வொரு கிறிஸ்தவனுக்கும் கூறுகிற செய்தி என்னவெனில், கோ-ணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும், கபடற்றவர்களுமாய் வாழ்ந்து கர்த்தருடைய இரக்கத்தையும் கிருபையையும் பெறலாம் என்ற தைரியத்தைக் கொடுக்கிறது,

தேவனுடைய பிள்ளைகளின் நீதியான காரியங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மறுத்த போதிலும், தேவன் அவர்களுடைய நற்-காரியங்களை கவனிக்கிறார்.

''**நோவா தன் காலதித்லே இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோ-டே சஞ்சரித்துக் கொண்டிருந்தான்** (ஆதி. 6;9) மக்களிடம் செல்வாக்கு பெறுவது, மெஜாரிட்டி வழியில் நடக்க முயல்வது நமது நோக்கமாக இருக்கக்கூடாது. கொஞ்சபேரே நம்மோடு சேர்ந்து நடந்த போதிலும், தேவனுடைய பாதையிலே நாம் நடக்க வேண்டும். தேவனுக்குள் நாம் நிலைத்திருந்தால் அவரும் நம்மில் நிலைத்திருப்பார். (யோவான் 15:4; எ.பி 8:10) தேவன் நமது தோழராக நம்மோடு இருந்தால், நமக்கு எதிரி யார்? (ரோமர் 8:31)

கோப்பேர் மரத்தால் ஒரு பேழையை உண்டாக்க நோவா-விடம் தேவன் கூறினார். அதை எவ்வாறு உண்டாக்க வேண்டுமென நோவாவுக்கு அவர் கட்டளையிட்டார். (ஆதி. 6:14-16). **நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்கு கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான்**'' (ஆதி. 6:22) நாமும் தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது அவர் கண்களில் கிருபையைப் பெறுவோம்.

''**நீதியை போதித்தவன்**'' என அப்போஸ்தலன் பேதுரு நோவாவை வர்ணிக்கிறார். (2 பேதுரு 2:5). ''**நீதி**'' என்ற வார்த்தை ''யோக்கியமான'' ''நல்லொழுக்கமுள்ள'' ''தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிற'' ''சரியானது எதுவோ அதையெல்லாம் செய்யக்கூடிய'' தன்மையைக் குறிக்கிறது.

மக்களை மகிழ்விப்பதற்காக நோவா போதிக்கவில்லை. குறிப்பிட்ட பகுதி மக்களைக்கவர, சமூக அலக்கோலங்களை கடைப்பிடிக்கும் முயற்சியில் அவன் ஈடுபடவில்லை. தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியம் பற்றியும், பாவத்துக்கு விரோதமாகவும் அவன் போதித்தான். ஆகையால் அவன் காலத்திய மக்களிடையே செல்வாக்குள்ளவனாக அவன் விளங்கவில்லை. ஒருவேளை அவனுடைய போதனை பெரிய மக்கள் கூட்டத்தைக் கவர்வதாக இருந்திருக்காது.

நோவாவின் போதனையை மக்கள் புறக்கணித்தனர். நோவா அவனுடைய மனைவி, மக்கள், மருமக்கள் ஆகியோர் மட்டுமே பேழைக்குள் நுழைய முடிந்தது. தேவனுக்கு செவிசாய்ந்து அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து இரசிக்கப்பட்டவர்கள் அவன் நாட்களில் எட்டே எட்டு பேர்கள் மட்டுமே இருந்தனர். நோவாவின் போதனைகளை மற்ற எல்லா மக்களும் நிராகரித்து வெள்ளத்திலே மூழ்கி மாண்டனர்.

மக்களால் ஏற்றுக் கொள்ளப்படாமல் அலட்சியம் செய்யப்-
பட்ட போதகர்களில் நோவா முதலும் அல்ல கடைசியும் அல்ல.
இயேசுவைப்பற்றி யோவான் கூறினார். ''அவருடைய சொந்த
ஜனங்களுக்குள் அவர் வந்தார். ஆனால் அவர்களோ
அவரை ஏற்றுக் கொள்ளவில்லை.'' (யோவான் 1:11)
நாற்பது ஆண்டு போதனைகளுக்குப் பயன் எதுவும் பெறாத
எரேமியாவை எண்ணிப் பாருங்கள். பவுல் அப்போஸ்தலன் பட்ட
பாடுகளை சிந்தித்துப்பாருங்கள். தீர்க்கதரிசிகளின் நிலைகலைக்
கவனித்துப் பாருங்கள்.

தேவனுடைய வார்த்தை அடிக்கடி நிராகரிக்கப்படுவதையோ காண
முடிகிறது.''என் சகோதரரே, உலகம் உங்களைப்பகைத்தால்
ஆச்சரியப்படாதிருங்கள். ''(1 யோவான் 3:13). தேவனு-
டைய வார்த்தையைப் புறக்கணித்து, உலகத்தின் சட்டங்களால்
ஆளப்படும் மக்கள் ''உலகத்துக்குரி யவர்கள்; ஆகையால்
உலகத்துக்குரியவைகளைப் பேசுகிறார்கள். உலகமும்
அவர்களுக்குச் செவி கொடுக்கும் ''(1 யோவான் 4:5)''
எப்படியென்றால், மாம்ச சிந்தை தேவனுக்கு விரோத-
மான பகை; அது தேவனுடைய நியாயப் பிரமாணத்-
துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்
கிறது. (ரோமர் 8:7) ''விபசாரரே, விபசாரிகளே ,உலக
சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்
களா! ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க
விரும்புகிறவன் தேவனுக்கு பகைஞனாயிருக்கிறான்'' (யாக் 4:4.)

மனிதனுடைய தயவைப் பெறுவதற்காக தேவகட்டளைகளில்
கொஞ்சம் ''நெளிவு சுளிவு'' களைக் கடை பிடிக்க வேண்டுமென
நமது போதகர்களிலும் சகோதரர்களிலும் பலர் எண்ணுகின்றனர்
வேதாகமச் செய்தி போதிக்கப்படும் ஒவ்வொரு தடவையும் 3000
பேர் ஞானஸ்நானம் பெறுவதாக இருப்பின் நாம் மகிழ்ச்சி அடையத்
தான் செய்வோம். என்றாலும் கட்டாய மத மாற்றம் நமது
வேலையல்ல; நற்செய்தியை போதிப்பது தான் நமது முக்கிய
கடமையாயிருக்கிறது. (1கொரி1:17) இயேசுவின் சீடர்கள் தகுதி-
களைப் பெற்றுக்கொள்ள மனம்இல்லாத போலிகளை சீடர்களாக நாம்
ஏற்றுக் கொள்ளுவது எவ்வித பலனுமற்ற வேலை. நமக்குக்
கொடுக்கப்பட்ட கடமை : ''உலகம் எத்திசையிலும் போய் சுவி-
சேஷத்தை அறிவித்தல்'' ''சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்-
டாலும் ஜாக்கிரதையாக திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணுதல்
எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ண
கடிந்து கொண்டு. புத்தி சொல்லுதல் (2தீமோ 4:2) ஆகியவைகளே
நெல்மணிகள் குறைவாக இருக்கிறதென்று பாளைகளையும் பதர்

களையும் சேகரித்து வைத்துக் கொண்டிருக்கிற விவசாயி பின்னர் ஏமாற்றமே அடைவான்.

நற்செய்திக்குக் கீழ்படிய பாவிகள் மறுக்கிறார்களே என நாம் சோர்வடைந்து போகத்தேவையில்லை. நம்மையே நாம் கேட்கவேண்டிய கேள்வி: தேவனைப்பற்றி எல்லா மக்களும் அறியும் காரியத்தில் என்னுடைய பங்கை சரியாகச் செய்கிறேனா? ஆத்தும ஆதாயத்திற்காக தேவனின் நற்செய்தியை அறிவிப்பதில் நான் உண்மையுள்ளவனாக இருக்கிறேனா? அப்படிப்பட்ட உண்மையான மனப்போக்கே தேவனுக்கு ஏற்புடையது. இயேசு கூறினார். ''எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள் என்று தீர்க்கதரிசியின் ஆகமத்தில் எழுதியிருக்கிறதே; ஆகையால் பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்ளுகிறவன் எவனும் என்னிடத்தில் வருகிறான்'' (யோவான் 6:45) சிலர் வசனத்தைக் கேட்கிறார்கள். ஆனால் புரிந்து கொள்வதில்லை. ''எப்போதும் கற்றாலும் ஒரு போதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிறார்கள்'' (2தீமோ 3;7). சத்தியத்தைக் கேட்டு விசுவாசிக்கிறவர்கள் கிறிஸ்துவுக்குள் வருகிறார்கள். விளைவைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதை விடுத்து, நமது வேலை போதிப்பது என நிச்சயித்துக் கொள்வோம். தேவனே விளையச் செய்கிறார்.
(1கொரி 3:6).

''தேவன் நோவாவையும் அவன் மக்களையும் ஆசீர்வதித்தார்'' .... '' (ஆதி. 9:1) தேவன் நோவாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தி, அந்த உடன்படிக்கையின் அடையாளமாக வானத்திலே ஒரு வில்லைப் போட்டார் (ஆதி 9:11-13) தேவனுடைய வார்த்தைக்கு முற்றிலுமாகக் கீழப்படியும் போது அவருடைய கிருபையின் கொடைகளைப் பெறுகிறோம். தேவனுடைய வார்த்தையை அலட்சியப்படுத்துவதும், அவருடைய கட்டளைகளை மீறுவதும் அவருடைய கோபத்தையும், நியாயம் தீர்க்கும் எண்ணத்தையும் தூண்டுவதாக அமைவது உண்மையே எல்லா உயிரினங்களையும் வெள்ளத்தால் அழிக்கப்போவதாக தேவன் நோவாவிடம் கூறினார். அவ்வாறே செய்தார். நெருப்பால் உலகை அழிப்பதாக நமக்குச் சொல்லுகிறார்; அதன்படியே செய்வார் சந்தேகம் வேண்டாம்.

''முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்: கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின் படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்த பின்பு சகலமும் சிருஷ்டிப்பின் தோற்ற முதல் இருந்த விதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள். பூர்வ காலத்தில் தேவனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்திினின்று தோன்றி ஜலத்தினாலே நிலை

கொண்டிருக்கிற பூமியும் உண்டாயின என்பதையும், அப்பொழுது இருந்த உலகம் ஜலப்பிரளயத்தினாலே அழிந்த தென்பதையும் மன தார அறியாலிருக்கிறார்கள். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலே அக்கினிக்கு இரையாக வைக்கப் பட்டு, தேவபக்தியில்லாதவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அழிந்து போகும் நாள் வரைக்கும் காக்கப்பட்டிருக்கிறது''.

II பேதுரு 3:3-7)

ஆகவே, கூட்டத்தைச் சேர்க்க முடியவில்லையே என்று சத்தியத்தோடு சமரசம் செய்யாதீர்கள். மனிதரைப் பிரியப்படுத்த காய்ந்த பாவிகளை நனைந்த பாவிகளாக்காதீர்கள் விளைவுகளை எதிர் பாராமல் வேலை செய்வோம். தேவனை ஒருக்காலும் ஒருவனும் ஏமாற்ற முடியாது. கர்த்தர் நம்முடைய காரியங்கள் அனைத்தையும் அறிவார். போராடுவோம் வெற்றி பெறுவோம்.

**எடிட்டன்**

**S.S. ராஜன்**

## (28-ம் பக்கத் தொடர்ச்சி)

பசி தாகத்தால் வாடுவோரைப்பற்றிய உண்மையான அக்கரை கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டும். வறுமையின் பிடியிலுள்ளவருக்கு உதவினால் தேவனுடைய ஆசீர்வாதத்தில் நமக்கு பங்குண்டு, அந்நியர், வியாதியஸ்தர், சிறைவாசிகள் பற்றியும் அக்கரை நமக்கு வேண்டும். (எபிரேயர் 13:1-3 பார்க்க) நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடுப்பத்தார்களுக்கும் நன்மை செய்வோம். (கலாத்தியர் 6:10).

இயேசு கிறிஸ்து அளித்த இரட்சிப்பின் மகத்தான திட்டம் (மத்தேயு 28:18-20; மாற்கு 16:15-16) எல்லா நாடுகளிலுமுள்ள சகல ஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டதாகும். ஒவ்வொரு ஆன்மாவும் அவருக்கு முக்கியமானவர்களே. இச்செய்தியை உலகம் முழுமைக்கும் எடுத்துச்செல்லும் தூதர்களாக கிறிஸ்தவர்கள் செயல்படவேண்டும். அது மட்டும் அல்ல; எல்லா ஆசிர்வாதங்களும் பொங்கி வழியும் அவருடைய நற்செய்தியை நாம் கேட்டு அதன்படி நடக்கவும் வேண்டும் (யாக் 1:22).

பசியுள்ளோரையும் வறுமையில் வாடுபவர்களையும் நாம் சந்திக்க மறுத்தால் இந்நற்செய்தியை அவர்களுக்கு எவ்வாறு கொண்டு போக முடியும்? அந்நியரை ஒதுக்கினால் எவ்வாறு அவர்களை அணுக முடியும்? ஒரு சிறைவாசியை சந்தித்து உபதேசிக்காத பட்சத்தில் தேவனுடைய வழி நடத்துதலின் தேவையை அவனுக்கு எவ்வாறு உணர்த்த முடியும்? விரும்பி வருவோரை மட்டுமே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவி செய்து போதிப்பதால் இயேசுவின் மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியுமா? அவருடைய கற்பனைகளை நாம் அலட்சியப்படுத்தினால் இறுதி தீர்ப்பின் நாளிலே வலது பக்கத்திலே வீற்றிருக்கும் பாக்கியத்தை எதிர்பார்க்க முடியுமா? சிந்தித்துச் செயல்படுவோம்!

**மூலம் வீலர் பவுண்ட்ஸ் தமிழில்: எஸ் எஸ், ராஜன்**

# எனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறாரா?

கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து மக்களுக்குப் பல பல கேள்விகள், சந்தேகங்கள். அவைகளில் குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் பற்றியும், அவருடைய பணிகள் பற்றியும் ஏகப்பட்ட குழப்பம்! இதைப்பற்றி பல்வேறு விதமான போதனைகள் கிறிஸ்தவர்களிடையே கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கெல்லாம் செவி கொடுத்துக் கொண்டிராமல் பரிசுத்த வேதாகமம் இதைப் பற்றி என்ன கூறுகிறது என்று பார்ப்போம்.

பரிசுத்த ஆவியானவர் தேவத்துவத்தின் மூன்று கூறுகளில் ஒரு கூறு.மற்ற இருகூறுகள் பிதாவாகிய தேவனும், குமாரனாகிய கிறிஸ்துவுமாக இருக்கிறார்கள். (2கொரி 13:14; மத் 28:18-20; ஆதி 1:2). அப் 5:3-4 பரிசுத்த ஆவியான வரை தேவன் என்றும் குறிப்பிடுகிறது. ஆகவே பரிசுத்த ஆவியானவர் யார்? அவருக்கும் எனக்கும் என்ன சம்பந்தம் என்பவைகளை வேத வசனங்களின் வெளிச்சத்தில் ஆய்வு செய்ய முயற்சிப்போம்.

I. இயேசு கிறிஸ்து பரமேறின பின்பு அனுப்பப்பட்டவர் தான் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவி. (யோவான் 14:16) அவர் பூலோகத்துக்கு அனுப்பப்படுவதின் நோக்கத்தை யோவான் 14:26 விவரிக்கப்பட்டிருக்கிறது அத்துடன் கீழ் வரும். வசனப் பகுதிகளையும் வாசித்துப் பார்த்தால் பரிசுத்த ஆவியானவருக்குப் பலவிதமான பொறுப்புகள் இருக்கின்றன என்று தெரிகிறது

(அ) அவர் நமது தேற்றரவாளர்; ஒரு சிறப்பு ஒத்தாசையாளர் யோவான் 14:16.

(ஆ) அவர் நமது ஆசான் (யோவான் 14:26)

(இ) அவர் இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சி பகருவபர் (யோவான் 15:26.)

(ஈ) அவர் நீதியைக் குறித்தும், பாவத்தைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துபவர் (யோவான் 16:7-11)

(உ) அவர் சகல சத்தியத்துக்குள்ளும் வழி நடத்துபவர். யோவான் 16:13.

(ஊ) அவர் கிறிஸ்துவை மகிமைப்படுத்துபவர். யோவான் 16:14

இயேசுகிறிஸ்து பூலோகத்தை விட்டு விட்டு மீண்டும் பரலோகத்துக்குப் போன பிறகு (அப் 1:4-9) பரிசுத்த ஆவியானவர் வந்து அப்போஸ்தலர்களையும், ஆதித் திருச்சபையையும் தேவனுடைய சகல சத்தியங்களிலும் வழி நடத்துவார் என்றும் (யோவான் 16:13) இயேசு கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குப் போதித்த யாவையும் நினைவுக்கு கொண்டு வருவார் என்றும் (யோவான் 14:26) பார்க்கிறோம்.

இந்தப் பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகளையும், பழைய ஏற்பாட்டை எழுதின ஆசிரியர்களையும் வழி நடத்தினார். (2பேதுரு 1:21) அதே போல கிறிஸ்துவின் பிரமாணமாகிய புதிய ஏற்பாடும் (யோவான் 1:17) கூட பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்களால் எழுதப்பட்டது. (2தீமோ 3:16,17; 1கொரி 2:13) நாம் தேவனுடைய சத்தியத்தை அறிந்து கொள்ளவும், நாம் என்ன செய்ய வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார் என்பதையும் நமக்குத் தெரிவிக்கிற பரிசுத்த வேதாகமம் முழுக்க முழுக்க பரிசுத்த ஆவியானவர் கைவண்ணம் என்று இதன் மூலம் தெளிவாகிறது.

II. தேவன் மாமிசமான யாவர் மேலும் தமது ஆவியை ஊற்றுவேன் என்று யோவேல் தீர்க்கன் மூலமாக உரைத்தார். (யோவேல் 2:28-32) இயேசுகிறிஸ்து இந்த உலகத்தை விட்டு மீண்டும் பிதாவினிடத்துக்குச் செல்லும் வேளையில் அவருடைய அப்போஸ்தலர்களிடம் தேவனுடைய வாக்குத் தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று சொல்லி விட்டுச் சென்றார் (அப் 1:4,5) அந்தக் கட்டளையின்படி அவர்கள், கிறிஸ்து பரமேறின பிறகு வந்த முதல் பெந்தே நாளன்று கர்த்திருக்கையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையோடும், மகிமையோடும் அவர்கள் மீது இறங்கினார் (அப் 2:1-4) அந்த அசாதாரண நிகழ்ச்சியைக் குறித்து பேதுருவும், மற்ற அப்போஸ்தலர்களும் இது தான் யோவேல் தீர்க்கன் மூலமாக உரைக்கப்பட்ட தீர்க்கத்ரிசனத்தின் நிறைவேறல் என்று கூறினார்கள். (அப் 2:16-21) இவ்விதமாய் தேவன் வெகு காலத்துக்கு முன்பு வாக்குத்தத்தம் செய்த ஆவியின் ஊற்றுதலை நிறைவேற்றினார். அப்2:17ல்.. ''மாம்சமான யாவர் மேலும்..'' என்று சொல்லப்பட்டிருக்கிறதே அதற்கு என்ன விளக்கம் என்று சிலர் கேட்கக் கூடும். மாம்சமான யாவர் மேலும் என்று சொல்லியிருப்பதை சிலர் தவறாக வியாக்கியானம் செய்கிறார்கள். அதாவது எல்லா ஆண்களின் மீதும் எல்லாப் பெண்களின் மீதும் என்று நினைத்துக் கொண்டு தாங்களும் பரிசுத்த ஆவியினால் ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ள முடியும் என்று ஆசைப்படு-

கிறார்கள். அப்படியானால் விசுவாசிக்காதவர்கள், அக்கிரமக்காரர்கள் விக்கிரக ஆராதனைக்காரர் ஆகியோர் மீதும் ஆவி ஊற்றப்படும் என்று அர்த்தமா? நியாய சிந்தையுள்ளவர்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பின் இதற்கு என்ன தான் பொருள்? யோவேல் இந்த தீர்க்கதரிசனம் உரைத்த நாளில், மக்கள் யூதர் என்றும் புறவினத்தவர் என்றும் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிந்து நின்றனர்.

இதை இன்னும் சற்றுத் தெளிவாய் புரிந்து கொள்வதற்கு (எபே2 :11,12) ஆகிய வசனங்களை வாசியுங்கள் ஆனபடியினாலே முன்னே மாமிசத்தின்படி **புறஜாதியாயிருந்து**, மாம்சத்தில் கையினாலே செய்யப்படுகிற விருத்தசேதனமுடையவர்களால் விருத்தசேதனமில்லாதவர்கள் என்னப்பட்ட நீங்கள் அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன் படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களாகவுமாயிருந்தீர்கள் என்று நினைத்துக் கொள்ளுங்கள்'' என்கிறது.

அகற்றப்பட விருந்த பழைய பிரமாணம் கூட யூதர்கள் என்றும் புறஜாதியார் என்றும் பிரித்தே வைத்திருந்தது. அதை வைத்துக் கொண்டு மாமிசமான யாவர் மேலும் என்றால் யூதர், புறஜாதியார் ஆகிய ஒவ்வொருவர் மேலும் என்றும் பொருள் கொள்ளக் கூடாது அப்படி எடுத்துக் கொள்வோம் ஆனால் பாவிகள், விசுவாசிகள் என்ற பேதம் இல்லாமல் 'எல்லோர்மேலும்' என்று அர்த்தமாகிவிடும். அதற்குத் துல்லியமான பதில், யூதர்கள் மற்றும் புறஜாதியாரின் பிரதிநிதிகளின் மீது என்பது பொருத்தமாயிருக்கும் ஏனெனில், அப். இரண்டாம் அதிகாரத்தில் பெந்தேகோஸ்தே நாளில் யூதர்களின் பிரதிநிதிகளாகிய அப்போஸ்தலர் மீதும் (அப் 2:1-4) சிறிது காலத்துக்குள் (அதுவும் கடைசி காலத்தின் ஒரு பகுதி தான்) அப். 10-ம் அதிகாரத்தில் புறஜாதிகளின் பிரதிநிதிகளாகிய ரோம நூற்றுக்கதிபதி கொர்நெலியு மற்றும் அவன் வீட்டார் மீதும் (அப் 10:44-47) பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அதன் மூலமாக இருதிறத்தாரின் பிரதிநிதிகளின் மீதும் இறங்கி மாம்சமான ''யாவர் மீதும்'' என்ற தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று என்று சொல்லலாம்-

அப் 2. ம் அதிகாரத்தில் பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் முதன்முறையாக இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்த பொழுது 'நீங்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டால் தேவன் உங்களுக்கு பாவ மன்னிப்பையும், பரிசுத்த

ஆவியின் வீரத்தையும் கொடுப்பார்' என்று சொன்னார்கள் (அப் 2:37-39) அந்தப்படி தேவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்களுக்கு பரிசுத்தஆவியின் வரத்தைத் தருகிறார். இந்தவரத்தை நாம் எப்படிப் பெற்றுக்கொள்கிறோம்? ''விசுவாசக் கேள்வியினாலே'' என்கிறது (கலா 3:1-5). கிறிஸ்துவுக்குள் கொண்டிருக்கும் விசுவாசம் பரிசுத்த ஆவியை நல்குகிறது. அப் 2:38ம் 1 கொரி 12:13ம் திருமுழுக்குப் பெற்றுக் கொள்ளும்போது பரிசுத்த ஆவி நம்முடைய உள்ளத்தில் வாசம் பண்ணுகுறார் என்று கூறுகின்றன. (2 தீமோ 1:14; 1 தெச 4:8; அப் 5:32) நமக்குள்ளே வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியின் மூலமாக நாம் தேவனிடத்தில் ஐக்கியமாக இருக்கிறோம். (ரோமர் 8:9) மேற்கூறிய இந்த வசனங்கள் எல்லாம் நாம் கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்து திருமுழுக்கின் வழியாய் அவரை ஏற்றுக் கொள்வோமானால் நமக்குப் பரிசுத்த ஆவியின் வரத்தைக் கொடுத்து அவருடைய இராஜ்ஜியத்தின் பிரஜைகளாக மாற்றுகிறார் என்று கூறுகின்றன. அப் 2:47

3. கிறிஸ்தவர்களாகி விட்டவர்களுக்கு பரிசுத்த ஆவி என்ன செய்கிறார்?

(அ) அவர் அவர்களைப் பரிசுத்தப்படுத்துகிறார். 1பேதுரு 1:1-2. அதாவது அவர்களைத் தேவனைப்போல் பரிசுத்தமும் தூய்மையுமாய் இருக்க ஒத்தாசை செய்கிறார்.

(ஆ) அவர் அவர்களுக்குள்ளே வாசம் செய்து பரிசுத்த வாழ்க்கை வாழ உற்சாகப்படுத்துகிறார். (1கொரி 6:19-20) நாம் தேவனுடைய ஆலயமாக இருக்கிறபடியால் நம்முடைய உடலையும் உள்ளத்தையும் தீட்டுப்படுத்தக் கூடாது.

(இ) அவர், நாம் பிசாசுக்கு எதிராக நடத்தும் ஆவிக்குரிய போராட்டத்தில் நம்மை பலப்படுத்துகிறார். (ரோமர் 8 : 13 ; பிலி 2:12-13.)

(ஈ) அவர் நம்முடைய பலவீனத்தில் நம்மைத் தாங்குகிறார். (ரோமர் 8:26,27)

(உ) நாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் என்றும், அந்த இரட்சிப்பை கடைசி வரை காத்துக் கொள்ள உதவுவார் என்ற உறுதியை தேவன் நமக்குத் தந்துள்ள பரிசுத்த ஆவியானவர் நமக்குக் கொடுக்கிறார்.
(எபே 1:13-14; 4:30, 2 கொரி 1:12; 5:5).

கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட மக்களின் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் பல ஆச்சரியமான நன்மைகளைச் செய்கிறார். அவர் எப்படியெல்லாம் செய்கிறார் என்பதை வேதாகமம்

நமக்கு முழுமையாக வெளிப்படுத்தாமையால் அந்த இரகசியத்தை நாம் மிகத் துல்லியமாகச் சொல்ல முடியாமல் தவிக்கிறோம். (உபா 29 : 29) ஆயினும் பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளும் நம்மோடும் இருக்கிறார் என்று அறிகிறோம்.

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசமாயிருக்கிறார் என்று எதனால் அறிய முடியும்? ஒருவித இனம் தெரியாத உணர்ச்சிகள் நமக்குள் ஏற்பட்டு சில அங்க சேஷ்டைகள் செய்வதின் மூலமாகவா? இல்லை. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்வதை நாம் எவ்வாறு உணரலாம் என்பதற்கு வேதாகமம் சில அறிகுறிகளை நமக்குக் காட்டுகின்றன.

(அ) கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மேல் நாம் விசுவாசம் வைக்கிறதினாலும், பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாசம் செய்கிறார் என்று வேதாகமம் சொல்வதினாலும் நாம் அறிகிறோம்.
(கலா 3:2,3,5, 14. யோவான் 17:37-38; 1 கொரி 12:13).

(ஆ) நாம் பாவ மன்னிப்புக்காக தண்ணீரில் முழுகித்திருமுழுக்குப் பெற்றுக் கொள்வதின் மூலமாக நாம் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுகிறோம் என்று அறிகிறோம். (அப்2:38; 1கொரி 12:13; தீத்து 3:5-6).

(இ) தேவனுடைய மகத்தான அன்பை உணரும் அறிவை நாம் அடைந்திருக்கிறதினால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார் என்று அறிகிறோம். (ரோமர் 5:5)

(ஈ) நாம் தேவனுக்குக் கீழ்ப்படிவதினால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறார் என்று அறிகிறோம்.
(அப் 5:32)

(உ) நாம் பாவத்துக்கு எதிராகப் போராடி பரிசுத்தம் அடைய வேண்டும் என்ற விருப்பம் நமக்குள் ஏற்படுவதினால், அந்த உணர்வு நமக்குள் ஏற்பட பரிசுத்த ஆவியானவர் உதவி செய்கிறார் என்று அறிகிறோம். (ரோமர் 8:13-14; 1கொரி 6:11-20; ரோமர் 8:5-9).

(ஊ) நமக்குள் ஆவியின் கனி உண்டாயிருப்பதினால் பரிசுத்த ஆவி நமக்குள் இருக்கிறார் என்று அறிகிறோம்.
(கலா 5:22-23).

என் இனிய நண்பர்களே! உணர்ச்சி வசப்பட்டு உடம்பை அலட்டிக் கொண்டு சில வினோத ஒலிகளை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்தால்தான் நமக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார் என்று

எண்ணி ஏமாந்து போகாதீர்கள். தேவன் பரிசுத்த ஆவியை நமக்குக் கொடுத்து நம்மை என்ன காரியத்துக்குப் பயன்படுத்த விரும்புகிறார், எப்படிப்பட்ட ஆசீர்வாதங்களைக் கொடுக்கிறார் என்றெல்லாம் அறிந்து கொள்ள பரிசுத்த வேதாகமமே உங்கள் வழிகாட்டியாக இருக்கட்டும்.

நாம் ஏற்கனவே சீர்தூக்கிப் பார்த்த காரியங்களை இரண்டு கேள்விகள் கேட்டு ஒரு தீர்மானத்துக்கு வரலாம்.

1. 'ஆவியினால் நிரப்பப்படுதல்' ஒன்பதின் பொருள் என்ன? இந்தச் சொற்றொடர் வேதாகமத்தில் பல முறை காணப்படுகிறது. சில வேளைகளில் இது அற்புத அடையாளங்கள் செய்யும் பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. சில வேளைகளில் அற்புத அடையாளங்கள் இல்லாமல் சாதாரண நிலையில் இருப்பதையும் பார்க்கலாம். தயவு செய்து கீழ்வரும் வசனப்பகுதிகளை வாசியுங்கள். யாத் 31:5: 35:33; லூக் 1:41,67, அப் 2:4;4:8,31; 9:17; எபே 5:18; குறிப்பாக லூக் 1:17ஐ யோவான் 10:41 உடன் ஒப்பிட்டுப் பாருங்கள்.

இந்த வசனங்களின் அடிப்படையில் பார்க்கும்பொழுது ஆவியில் நிரப்பப்படுதல் என்பது எப்போதுமே ஏதாவது ஒரு அற்புத அடையாளம் செய்கிற வல்லமையுடன் கூடிய பரிசுத்த ஆவியைக் குறிப்பதில்லை. ஆவியினால் நிரப்பப்படுதல்'' என்பதற்கு தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் இருத்தல் என்றே பொருள் (ரோமர் 8:5) நம்முடைய சொந்த ஞானத்தை நம்புவதை விட தேவன் மேல் சார்ந்து நிற்பது என்றே பொருள், எபே 5:18-21ல் நாம் பரிசுத்த ஆவியில் நிறையும் பொழுது தேவனைப் பாடித் துதித்து கீழ்ப்படிந்து வாழும் நிலைக்கு உட்படுவோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

2. அந்நிய பாஷை பேசுதல், தெய்வீக சுகம் கொடுத்தல் ஆகியவைகள் எப்படி நிகழ்கின்றன?

இன்றைக்கு அற்புத அடையாளங்கள் என்று சில பேர் சொல்லுகிறார்களே, அவைகள் நாம் வேதாகமத்தில் வாசிக்கிற அற்புத அடையாளங்கள் போன்றவைகள் அல்ல. அன்றைக்குச் செய்யப்பட்ட அற்புத அடையாளங்கள் ஒரு நோக்கத்துக்காகச் செய்யப்பட்டவை. மிகச் சாமானியர் என்று கருதப்பட்ட அப்போஸ்தலர்கள் சொல்லுகிறவைகள் தேவனிடத்திலிருந்து அவர்கள் பெற்றுக் கொண்டவைகள் என்பதை நிரூபிக்க அவைகள் தேவைப்பட்டன (2கொரி 13:8-10; மாற்கு 16:20; எபி 2:3-4; யோவான் 20:30,31). பெரும்பான்மையான அற்புதங்கள் அப்போஸ்தலர்களால் செய்யப்பட்டன அப் 2:43-ம3; 4:33; 5:12; 6:5-6: 8:5 அப்போஸ்தலர்கள் அல்லாதவர்கள் கூட அற்புதங்கள் செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்கள் அந்த வல்லமையை அப்போஸ்தலர்கள் அவர்கள் மீது கைவைத்து அருளியவைகள் என்பதைக் கவனியுங்கள் (அப் 8:74-18) இன்றைக்கு அப்

படிப்பட்ட வரங்களை மற்றவர்களுக்கு கொடுக்கக்கூடிய அப்போஸ்தலர்கள் உயிரோடு இல்லை; அன்றியும் இன்றைக்கு நடப்பிக்க வேண்டிய அவசியமுமில்லை. 1கொரி 13:8-10; எபே 4:8-15 ஆகிய வசனப்பகுதிகள், சபை பூரணமடையும் வரை தான், பிறகு நின்று போகும் என்று கூறுகின்றன.

தேவனுடைய காரியங்களை உற்றுக் கவனித்தால், அவசியம் நேரும் பொழுது அற்புதமாகவும், தேவைகள் முடிந்த பிறகு இயற்கைச் சட்டத்துக்கும் ஒப்புக் கொடுப்பதே தேவ எத்தனம் என்பதை அறிந்து கொள்ள முடியும். சிருஷ்டிப்பில் மனுஷன் முதல் தாவரங்கள் வரை அற்புதம். பின்னர் இயற்கை விதிப்படி வித்துக்களின் வழியாக உற்பத்தி வனாந்திரப் பயணத்தில் நாற்பது ஆண்கள். அற்புத மன்னா கிழிந்து போகாத ஆடைகள், காலணிகள். காணான் தேசத்துக்குள் பிரவேசித்து முதல் அறுவடை முடிந்ததும் மன்னு நிறுத்தப்பட்டிருப்பதையும் எண்ணிப்பாருங்கள்.

தேவன் மனுக்குலத்துக்கு வெளிப்படுத்த வேண்டும் என்று நினைத்த காரியங்களை பரிசுத்த மனிதர்களைக் கொண்டு பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்தி விட்ட பிறகு இனிமேல் அற்புத அடையாளங்கள் மூலம் எதையும் நிருபிக்க வேண்டிய அவசியம் இல்லை (1பேதுரு 1:3; யூதா 3).

நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்க வேண்டும் என்று வேதாகமம் கூறுகிறது. (2கொரி 5:7) நாம் இன்னும் அப்புத அடையாளங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்போமானால் நாம் சாத்தானால் வஞ்சிக்கப்பட நேரிடும் (மத் 24:24; 2தெச 2:9-12 கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூட அடையாளங்கள் காண விரும்பிய மக்களைக் கண்டித்து கடிந்து கொள்கிறார் (மாற்கு 8:11-12) ஆகவே வெளிப்படுத்தப்பட்டு, நம் கையில் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தைகளும் சத்தியங்களும் அடங்கிய வேத புத்தகமே நம்முடைய வழி காட்டியாக இருக்க வேண்டும்.

பரிசுத்த ஆவியானவர் இன்றைக்கு அற்புத அடையாளங்களே செய்வதில்லை என்பதனால் பரிசுத்த ஆவியானவர் கிரியைகளே செய்வதில்லை என்று பொருளா? அப்படியல்ல. பரிசுத்த ஆவியானவர் மும்மரமாக செயல்பட்டுக் கொண்டு தான் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்யாததினால் அசுத்த ஆவி நம்மை மேற்கொண்டு, தொல்லை கொடுக்கும் என்ற பயம் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் செய்கிறபடியால் தேவனுடைய ஒத்தாசை நமக்கு உண்டு ஆகவே நாம் அச்சமின்றி கர்த்தருடைய வழியைப் பின்பற்றி நம்முடைய கிறிஸ்த வாழ்க்கையைத் தொடர்வோம்.

நாம் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் பரிசுத்த ஆவியானவர் எனக்குள் இருக்கிறாரா? என்ற கேள்வியுடன் ஆரம்பித்தோம் நாம் இதுவரை செய்த ஆய்வின்மூலம், கர்த்தருடைய உபதேசச் சட்டங்களுக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்த எல்லாருடைய உள்ளங்களிலும் பரிசுத்த ஆவியானவர் வாழ்கிறார் என்று புரிந்து கொண்டோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

**E. Z. செல்வநாயகம்**

# இறுதித் தீர்ப்பில் நீங்கள் எந்தப் பக்கம்?

மத்தேயு 25ஆம் அதிகாரம் 31 முதல் 46 வரை உள்ள வசனங்களை கவனமாய் படித்துப்பாருங்கள். இயேசு ஒலிவ மலை மீது அமர்ந்திருந்தார். அவருடைய சீடர்கள் அவரை அணுகி உலகத்தின் முடிவுபற்றியும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை பற்றியும் அவரிடம் கேட்டனர். கிறிஸ்து அவர்களுடைய கேள்விக்கான பதிலை விளக்கிக் கூறிவிட்டு (மத்தேயு 24,25) கடைசியாக நியாத்-தீர்ப்பு பற்றிய காட்சியுடன் முடிக்கிறார். (மத் 25-31-44) நீதிமான்கள் வலது பக்கத்திலும் துன்மார்க்கர்கள் இடம் புறமும். நிறுத்தப்படுவார்கள். அன்றைய நாளிலே நடக்கும் தீர்ப்பு சிலரை வியப்படையச் செய்யும்!

அந்த தீர்ப்பின் நாள் வருகையில், வியப்படைந்து நிற்போரில் நாமும் ஒருவராக இருப்போமோ? 1 கொரி 10:12

''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' (மத் 25:34) என்ற வரவேற்பு கிடைக்குமா? அல்லது, ''சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்'' என்ற திடுக்கிடும் தீர்ப்பை அடைவோமா? (மத் 25-41).

இப்பகுதியில் நீதிமான்களுக்கு குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்துமே இரக்க சிந்தை, நற்கிரியைகள் சம்பந்தப்-பட்டவையாகும், ஆகவே இவற்றைக் கடைபிடித்து நடப்பது கிறிஸ்தவர்களின் தலையாயக் கடமை. பசித்தோருக்கு உணவு, தாகமுள்ளவர்க்கு தண்ணீர் அந்நியருக்கு உதவி தேவையுள்ளவர்க்கு ஆடை, நோயுற்றோர், சிறைப்பட்டோருக்கு ஆறுதல் இத்தியாதி இக்கடமைகளை பலர் புறக்கணித்து வருகின்றோம். யாக் 1-27.

பாவத்தைப் பற்றி நம்மில் பலருக்குத் தெளிவில்லை, கொலை கொள்ளை, திருட்டு, விபச்சாரம், பொய் ஆகியவைகள் தான் பாவம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியல்ல; நற்செயல்களைச் செய்யத் தவறுவதும் கூட பாவம் என்று வேதா-கமம் கூறுகிறது. (யாக் 4:17; 1 யோ. 5:17; எபி 2;3! 10:25) தேவன் வேண்டாம் என்று விலகினதைச் செய்வதும் பாவமே (1 யோ 3:4! கலா 5:19-21) இவைகளைப் புரிந்து கொண்டு, கிறிஸ்தவர்கள் செயல்படத் தவறினால் பாவம் செய்கிறோம் என்றே பொருள்.

இக்கடமைகளை நிறைவேற்ற நற்பண்புடன் மாயமற்ற அன்பு செலுத்துவதாகும். கட்டாயத்தினிமித்தமாகவும் மற்றவர்கள்

பாராட்டவேண்டும் என்பதற்காகவும் இவற்றை நாம் செய்யக் கூடாது.

தேவன் பேரிலும் மனிதர் பேரிலுமுள்ள அன்பால் உந்தப்பட்டே இந்த நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். நம்மைப்போலவே நம் அயலானையும் நேசிக்க வேண்டும் என்பது கட்டளை நல்ல சமாரியனுடைய செயல் இதை நமக்குப் படம் பிடித்துக்காட்டுகிறது. (லூக்கா 10:25-37) ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்பு கூருவாயாக'' என்பது முதலாம் பிரதான கற்பனையாகும். அதை அடுத்து இரண்டாவது கற்பனை, ''உன்னிடத்தில் நீ கூறுவது போலப் பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக'' என்பதாகும். (மத் 22:34-40). எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது சக மனிதர்களிடம் உண்மையாக அன்பு செலுத்தவேண்டும். இவ்வுலகில் நாம் மட்டுமே தனித்து வாழவில்லை. எனவே ''மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய வேண்டும்மென்று விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்'' (லூக் 6:31; மத் 7:12) என்ற தங்கச் சட்டத்தை நாம் ஏற்று நடக்க வேண்டும்.

சில நேரங்களில் சில மனிதர்களுடன் நாம் இணைந்து போவது எளிதாக இருக்கக்கூடும்; இன்னும் சில வேளைகளில் அது கடினமாக இருக்கலாம். ஒரு உறவினர் அல்லது நண்பரோடு ஒத்துப் போவது நமக்கு எளிதாகத்தோன்றும். நமது நண்பர்களுக்கு உணவளிக்கிறோம். அவர்களும் பதிலுக்கு நமக்குச் செய்கிறார்கள். நமது உறவினர்கள் ஒன்றாகச் சேரும் திருமணம் அல்லது பண்டிகை நாட்களில் பலத்த விருந்து செய்து மகிழ்கிறோம். வறுமையில் வாடும் ஏழைகளுக்கு நாம் உண்டு, மீதியானவைகளை அரை மனதுடன் கொடுக்கிறோம். (லூக் 16:19-31).

ஒரு ஆப்த நண்பரோ அல்லது உறவினரோ வியாதியாயிருப்பின் அவரைச்சந்தித்து ஆறுதல் கூறி தேவைப்பட்ட உதவிகளைச் செய்கிறோம். அன்னியர்கள் காரியங்கள் என்று வரும்போது ''போதிய நேரம் கிடைப்பதில்லை;'' ''அது ஒட்டுவாரொட்டி நோய், நம்மையும் தொற்றிக் கொள்ளும்'' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு ஒதுங்கிக் கொள்கிறோம்.

''வறுமையில் வாடுவோருக்கு உதவியா? நாமே வறுமைக் கோட்டுக்கும் கீழ்த்தான் இருக்கிறோம். நமக்கு யார் உதவுகிறார்கள்? நமது பிரச்னையே தலைக்கு மேல் இருக்கின்றன. ஊருக்கு உதவ முடியுமா? அது அவன் தலைவிதி'' என்று வேதாந்தம் பேசுகிறோம்.

சிறைவாசிகளைச் சந்திப்பது? ஐயோ, வேறு வினையே வேண்டாம் உனக்கும் அவனுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும்; இல்லாவிட்டால் உனக்கும் ஏன் இவ்வளவு அக்கரை? என்று போலீஸ் பிடித்துக்கொள்ளும் நமக்கு ஏன் வீண் வம்பு? என்று செய்கிறவனையும் கெடுத்து விடுகிறோம்.

தேவனுடைய வசனமோ ''சகல வித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டும்'' என்றுரைக்கிறது. (II கொரி-2-8) எபேசி 2:10; II தெசெலோ 2:17; I தீமோ. 618; தீத்து 3:8) நாம் தரும் கனிகளைக்கொண்டே நாம் அறியப்படுகிறோம்; நியாயந் தீர்க்கப்படுகிறோம். (மத், 7:16: லூக். 6: 14).

 (19-ம் பக்கம் பார்க்கவும்)

YOUR ATTENTION PLEASE!

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9: 00 to 9: 15 P. M.
Fridays - 7:45 to 8: 00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9: 00 to 9-15 P. M.
Fridyas-- 9: 00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:15 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Sturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 *(Kerala)*
Tuesdays-3:45 to 4:00 P.M.
Frideys-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bangalore 560004
Sundays-1:45 to 2:00 P. M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

வாசக அன்பர்களே!

தயவுகூர்ந்து உங்களுக்கு இதழ் ஒழுங்காக வராவிட்டால் உடனே தொடர்பு கொள்ளுங்கள். ஒன்றுக்கு மேற்பட்ட இதழ்கள் வந்தால் மற்றவர்களுக்குக் கொடுத்து அவர்களை விலாசம் கொடுக்கும்படி ஊக்குவியுங்கள். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவியுங்கள். முகவரியைப் பின்கோடு உட்பட வீட்டுஎண், தெரு அல்லது பாதையின் பெயர், மாவட்டம் உட்பட தெளிவாக எழுதி ஒத்துழையுங்கள்.

**ஆசிரியர்**

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.

Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:

The Editor
**THIRUMARAI AASAAN**
Post Box No: 58 ERODE -638 001.